# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

கழக தலைவர் ஆணைக்கிணங்க சென்னை வடகிழக்கில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அறிவிப்பின்படி சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்து ஆய்வு செய்ய கள ஆய்வுக் குழுவினர் கீழ்க்கண்டவாறு வருகை தருகின்றனர். இதில் ஆய்வுக்குழு உறுப்பினர்கள் : எம்.எம்.அப்துல்லா, ரேகா பிரியதர்ஷினி ஆகியோர் ஆய்வு செய்கின்றனர்.

| தேதி | கிழமை | தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 22.05.2026 | வெள்ளிக்கிழமை | திருவொற்றியூர் தொகுதி | T.K.P திருமண மண்டபம் |

சட்டமன்ற தொகுதி வாரியாக குறிப்பிடப்பட்ட நாளன்று இரு வேளைகளிலும் இக்கள ஆய்வுக்குழுவினர் வருகை தரும் போது "அந்தந்த தொகுதியில் போட்டியிட்ட வேட்பாளர்கள், கழக தொகுதி பார்வையாளர்கள், அந்தந்த தொகுதியில் அடங்கிய மாநில, மாவட்ட நிர்வாகிகள், தொகுதிக்குட்பட்ட முன்னாள், இன்னாள் சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு, உறுப்பினர்கள், பகுதி, ஒன்றிய, பேரூர், வட்ட கழக செயலார்களை முதலில் தனிதனியாக அழைத்து பேசி ஆய்வு செய்ய உள்ளனர்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்- 20.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## புதுச்சேரி மாநிலத்திலுள்ள அனைத்துத் தொகுதிகளிலும்

# முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## மாநில அமைப்பாளர் இரா.சிவா தலைமையில் நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

புதுச்சேரி, மே 22 –

புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் நேற்று (21.5.2026) மாலை புதுச்சேரி சித்தன்குடியில் உள்ள ஜெயராம் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு மாநில கழக அவைத் தலைவர் எஸ்.பி.சிவக்குமார் தலைமை வகித்தார். மாநில கழக துணை அமைப்பாளர்கள் வி.அனிபால் கென்னடி, அ.தைரியநாதன், ஏ.கே.குமார், மாநில பொருளாளர் இரா.செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல்.சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

மாநில கழக அமைப்பாளரும், மேனாள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலை வருமான இரா. சிவா தீர்மானங்களை விளக்கி சிறப்புரை ஆற்றினார்.

கூட்டத்தில் நிறைவேற்றப் பட்ட தீரமானங்கள்:

**தீர்மானம்: 1**

திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணிச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை தி.மு. கழகத்தின் சட்டப்பேரவை கட்சித் தலைவராக தேர்வு செய்தும், தமிழ்நாடு சட்டமன்றத்தின் எதிர்க்கட்சித் தலைவராகவும் பணியாற்றிட வாய்ப்பு வழங்கிய கழகத் தலைவர் தளபதியார் அவர்களுக்கும், எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்ற முதல் நாளில் தமிழ்நாடு சட்டப்பேரவையில் எழுச்சி உரையாற்றி கழகத்தினருக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தி உள்ள நமது இளம்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம்: 2**

புதுச்சேரி மாநிலத்திற்கு உட்பட்ட காலாப்பட்டு, ராஜ்பவன், உருளையன்பேட்டை, உப்பளம், முதலியார்பேட்டை, வில்லியனூர், மங்கலம், திருபுவனை, கதிர்காமம், நெல்லித்தோப்பு, பாகூர், காரைக்கால் தெற்கு, நிரவி டி.ஆர். பட்டினம் ஆகிய தொகுதிகளில் போட்டியிட்ட கழக வேட்பாளர்கள் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களை ஆதரித்து தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்ட கழகத் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்களுக்கும், கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும், புதுச்சேரி மாநில கழக தேர்தல் பொறுப்பாளர், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி., மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சித் தலைவர்கள், நிர்வாகிகள், தோழர்களுக்கும், குறிப்பாக நமது கழகத்தைச் சார்ந்த மாநில கழக நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், தொகுதி கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தேர்தல் குழு உறுப்பினர்கள், BLA2, BLC, உள்ளிட்ட அனைத்து நிலை பொறுப்பாளர்களுக்கும் இக்கூட்டம் நன்றியினை தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம்: 3**

புதுச்சேரி மாநிலத்தில் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் மாதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியில் நமது கழகத் தலைவர் அண்ணன் தளபதியார் அவர்கள் நிறுத்திய கழக வேட்பாளர்களுக்கு வாக்களித்த அனைத்து வாக்காளப் பெருமக்களுக்கும், ஐந்து கழக உறுப்பினர்களை 16வது சட்டப்பேரவைக்கு தேர்ந்தெடுத்தமைக்கும் இச்செயற்குழு கூட்டம் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

**தீர்மானம்: 4**

முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3ம் தேதி அன்று புதுச்சேரி மாநிலத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும், தொகுதி கழகம், கிளைக் கழகம் மற்றும் சார்பு அணிகளின் சார்பாக தலைவர் கலைஞர் அவர்களின் திருஉருவப் படத்தினை வைத்து மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதோடு இனிப்புகள் வழங்கியும், நலிந்த ஏழை, எளியவர்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி சீரும், சிறப்பு மாக பிறந்தநாளை வெகு விமர்சியாக கொண்டாட வேண்டும் என இக்கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம்: 5**

நடந்து முடிந்த தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்து கள ஆய்வு மேற்கொள்ள குழு அமைத்துள்ள கழகத் தலைவர் அவர்களுக்கு இக்கூட்டம் நன்றி தெரிவிப்பதுடன், புதுச்சேரி மாநில சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் குறித்தும் கள ஆய்வு மேற்கொள்ள கழகத் தலைவர் அவர்களால் நியமிக்கப்படும் குழுவினர் புதுச்சேரிக்கு வருகை தரும்போது கழகத்தினர் முழு ஒத்துழைப்பு அளித்து கழக வளர்ச்சிக்கு வழி காண வேண்டும் என்று இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது.

**தீர்மானம்: 6**

சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் தளபதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தின் வாயிலாக தலைவர் அவர்கள் ஆற்றிய உரையினை கவனத்தில் கொண்டு நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே சுயபரிசோதனைக்கு உட்படுத்தி உண்மையான உடன்பிறப்புகளாக நம்மை முன்னெடுத்து கட்சியின் தலைவர் அவர்கள் எடுக்கும் முடிவுகளை உள்வாங்கி எதிர்கால அரசியல் களத்தை நமது அயராத உழைப்பால் கட்டமைத்து வெற்றியை நோக்கி பணி ஆற்றுவோம். தோல்வியில் இருந்து மீண்டு கழகத் தலைவர் தளபதி தலைமையில் தமிழ்நாட்டிலும், புதுச்சேரியிலும் கழக ஆட்சி அமைய பாடுபடுவோம் என்று இக்கூட்டம் ஒருமனதாக முடிவு செய்கிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில், கழக சட்டமன்ற உறுப்பினர்கள் வே.கார்த்திகேயன், ஆ.ரமேஷ் (எ) செந்தில், விக்னேஷ் கண்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பூ. மூர்த்தி, நந்தா. சரவணன், பி.அங்காளன், உருளையன்பேட்டை எஸ்.கோபால், மங்கலம் ரங்கன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் கே.எம்.பி. லோகையன், டி.அருட்செல்வி, பொதுக்குழு உறுப்பினர்கள் ந.தங்கவேலு, பெ.வேலவன், வீ.சண்முகம், எஸ். தர்மராஜன், ஜெ.வேலன், ஆர். கோகுல், ப.இளம்பரிதி, நா.கோபாலகிருஷ்ணன், எஸ்.எஸ்.செந்தில்குமார், எஸ்.அமுதாகுமார், எஸ். நர்கீஸ், தொகுதி செயலாளர்கள் இரா. சக்திவேல், வ. சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ. நடராஜன், ஜி.பி.சவுரிராஜன், எல். மணிகண்டன், து.சக்திவேல், கோ. தியாகராஜன், ர.சிவக்குமார், ரா. ஆறுமுகம், ப.வடிவேல், பி.ஆர். ரவிச்சந்திரன், வெ. சக்திவேல், க. ராஜாராமன், பி.சா. இளஞ்செழியபாண்டியன், சே.ராதாகிருஷ்ணன், ம.கலைவாணன், செ.சத்தியவேலு, முருகதாஸ்,

அணிகளின் அமைப்பாளர்கள் மாணவர் அணி எஸ்.பி.மணிமாறன், விவசாய அணி வெ. குலசேகரன், இலக்கிய அணி சீனு. மோகன்தாசு, விவசாய தொழிலாளர் அணி தவ. முருகன் மீனவரணி ந. கோதண்டபாணி, கலை, இலக்கிய பகுத்தறிவுப் பேரவை கி.சங்கர் (எ) சிவசங்கரன், நெசவாளர் அணி ந. செந்தில்முருகன், விளையாட்டு மேம்பாட்டு அணி ந. ரவிச்சந்திரன், மகளிர் அணி காயத்ரி ஸ்ரீகாந்த், தொண்டர் அணி வீரன் (எ) விரய்யன், வர்த்தகர் அணி சு. ரமணன், தகவல் தொழில்நுட்ப அணி தாமோ. தமிழசரன், மருத்துவர் அணி ஆனந்து ஆரோக்கியராஜ் அமைப்பு சாரா ஓட்டுநர் அணி ம.மதிமாறன், சுற்றுச்சூழல் அணி த.முகிலன், அயலக அணி அ.ஷாஜகான், வழக்கறிஞர் அணி ச.பரிமளம், தொமுச அண்ணா அடைக்கலம் மற்றும் அணிகளின் தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.




புதுச்சேரி மாநில திராவிட முன்னேற்றக் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் நேற்று (21.5.2026) புதுச்சேரி சித்தன்குடியில் உள்ள ஜெயராம் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாநில கழக அவைத் தலைவர் எஸ்.பி.சிவக்குமார் தலைமை வகித்தார். மாநில கழக துணை அமைப்பாளர்கள் வி. அனிபால் கென்னடி, அ.தைரியநாதன், ஏ.கே.குமார், மாநிலப் பொருளாளர் இரா.செந்தில்குமார் எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல்.சம்பத் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநில கழக அமைப்பாளரும், மேனாள் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா தீர்மானங்களை விளக்கி சிறப்புரை ஆற்றினார்.




கோவை வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் வடகோவையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழக அலுவலகத்தில் அவைத்தலைவர் புருஷோத்தமன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி கருத்துகளை வழங்கி உரையாற்றினார். இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, நகர, பேரூர், வட்ட கழக செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினுக்கு வாழ்த்துகள்!

# முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாள் விழாவை சிறப்பாகக் கொண்டாடுவோம்!

## கோவை வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

*கோவை, மே 22 -*

*கோவை வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழு கூட்டம் வடகோவையில் அமைந்துள்ள ஒருங்கிணைந்த கோவை மாவட்ட கழக அலுவலகத்தில் அவைத் தலைவர் புருஷோத்தமன் தலைமையில் நடைபெற்றது.*

*இக்கூட்டத்தில் மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி கருத்துகளை வழங்கி உரையாற்றினார்.*

*இதில் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, நகர, பேரூர், வட்ட கழகச் செயலாளர்கள், பொறுப்பாளர்கள், கழக சார்பு அணிகளின் மாவட்ட அமைப்பாளர், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.*

*இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு : -*

*கோவை வடக்கு மாவட்டத்தில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்ட கழகத் தலைவர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களுக்கும், கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் இக்கூட்டத்தின் வாயிலாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவராக பொறுப்பேற்ற இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு கோவை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.*

*வருகின்ற ஜூன் 3ல் கழகம் வளர்த்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழாவை கோவை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, பகுதி, நகர, பேரூர், வட்டக் கழக, கிளைக் கழகத்திற்குட்பட்ட பகுதிகளில் கழகக் கொடியேற்றி பொது மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கி சிறப்பாக கொண்டாடுவது என தீர்மானிக்கப்படுகிறது.*

*இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.*

# சட்டமன்றத் தொகுதி - கள ஆய்வு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க, திருவாரூர் மாவட்டத்தில் உள்ள நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் சட்டமன்ற தேர்தல் முடிவுகள் குறித்த கள ஆய்வுக் கூட்டம் மாவட்டக் கழக செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. அறிவிப்பின்படி, திருவாரூர் மாவட்டத்தில் உள்ள திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, திருவாரூர் மற்றும் நன்னிலம் ஆகிய தொகுதிகளில் கள ஆய்வுக் கூட்டம் திருமதி.மாலதி நாகராஜ் (9894512669) (மாநில மகளிர் அணி துணைச் செயலாளர் ) சி.ஆனந்தகுமார் (8680878890) (மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர்) ஆகியோர் முன்னிலையில் கீழ்க்கண்டவாறு நடைபெறுகிறது.

| நாள் | இடம் | தொகுதி |
|---|---|---|
| 27.05.2026 | குவைத் பேலஸ், திருவாரூர் | திருவாரூர் |
| 28.05.2026 | கோட்டூர் வடக்கு ஒன்றிய தேர்தல் பணிமனை அலுவலகம் கோட்டூர் | திருத்துறைப்பூண்டி |
| 29.05.2026 | நகர கழக அலுவலகம் மன்னார்குடி | மன்னார்குடி |
| 30.05.2026 | எம்.கே.திருமண மண்டபம், பூந்தோட்டம் | நன்னிலம் |

**அண்ணா அறிவாலயம்**
சென்னை - 18
நாள் : 21.05.2026

**தலைமைக் கழகம்**
தி.மு.க.

## தென்மேற்குப் பருவமழையைச் சமாளிக்க முன்னெச்சரிக்கையாக

# கேரளா செல்லும் தேசிய பேரிடர் மீட்புப் படை!

அரக்கோணம், மே 22 -

கேரளாவில் தென்மேற்கு பருவமழை தொடங்க உள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக அரக்கோணத்தில் இருந்து தேசிய பேரிடர் மீட்பு படையின் (NDRF) 8 குழுக்களை கேரளாவிற்கு விரைந்து அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

கேரள மாநில பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் (KSDMA) கோரிக்கையைத் தொடர்ந்து, 2026ஆம் ஆண்டின் தென்மேற்கு பருவமழைக்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் ஒரு பகுதியாக, தேசியப் பேரிடர் மீட்புப் படையின் 8 குழுக்கள் (மொத்தம் 240 வீரர்கள்) கேரளாவின் பல்வேறு மாவட்டங்களில் பணியில் ஈடுபடுத்தப்பட்ட உள்ளனர்.

NDRF செயல்பாடுகளின் துணைத் தளபதி பிரவீன் எஸ்.பிரசாத் இதுகுறித்து பேசுகையில், "பருவமழை முன்கூட்டியே தொடங்கும் என இந்திய வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளதாலும், கேரளாவின் வேண்டுகோளுக்கு இணங்கவும், என்.டி.ஆர்.எஃப் பட்டாலியன்களில் இருந்து எட்டு மீட்புக் குழுக்கள் கேரளவிற்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்த குழுக்கள் கேரளாவின் கோழிக்கோடு, வயநாடு, திருச்சூர், எர்ணாகுளம் மற்றும் கொல்லம் உள்ளிட்ட மாவட்டங்களில் இருப்பார்கள். வெள்ளம் மற்றும் நிலச்சரிவு போன்ற பேரிடர்களை எதிர்கொள்ள ரப்பர் படகுகள், மரம் அறுக்கும் கருவிகள் மற்றும் நவீன தகவல் தொடர்பு சாதனங்களுடன் இவர்கள் தயார் நிலையில் இருப்பார்கள். அரக்கோணத்தில் உள்ள தேசிய பேரிடர் மீட்பு படை மையத்தில் இருந்து 24 மணி நேரமும் நிலைமை கண்காணிக்கப்படும்.

தவிர ஊட்டி, திருநெல்வேலி மற்றும் கோயம்புத்தூர் உள்ளிட்ட பகுதிகளை உள்ளடக்கிய வகையில், தமிழ்நாட்டிலும் நான்கு மீட்புக் குழுக்கள் பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளன.

இதுதவிர, சென்னை மற்றும் அந்தமான் தீவுகளிலும் நாங்கள் மீட்புக் குழுக்களைப் பணியில் அமர்த்தியுள்ளோம் என்று கூறியுள்ளார்.



கழகத் தலைவர் அவர்களின் கடந்த திராவிட ஆட்சியில் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் கிராமம், மஜரர் பூளவாடி புதுநகர் பிரிவு புல.எண். 473/C மற்றும் 474/B1 குடியிருந்து வரும் 33 நபர்களுக்கு மின் இணைப்பு வழங்க தடையின்மை சான்றினை திருப்பூர் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர், கே.ஈஸ்வரசாமி எம்.பி., இரா.ஜெயராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ., உடுமலை கிழக்கு ஒன்றியப்பொறுப்பாளர் மாரிமுத்து ஆகியோர் பெற்றுக் கொடுத்த சான்றினை அப்பகுதி மக்களிடம் வழங்கினர். இதில் கிளைச் செயலாளர்கள் வடிவேல் பூலவாடி, சிவராஜ் கல்லாபுரம், கிளை இளைஞர் அணி அமைப்பாளர் அபீப் ரகுமான், ஒன்றிய துணைச் செயலாளர் கார்மேகம், விவசாயத் தொழிலாளர்களின் துணை அமைப்பாளர் கண்ணன், முசீப் ரகுமான், கண்ணன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.